தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 அக்டோபர் 2022 கனி 11




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 34
தலைப்பு : நற்சாட்சி – Good Report
வேத வாசிப்பு : அப்போஸ்தலர் 6:1-15

1. விசுவாசத்தினாலே முன்னோர்கள் நற்சாட்சி - எபி.11:1-3
2. யூதஜனங்களால் நற்சாட்சி பெற்ற அனனியா, பவுல் - அப்.22:12,13
3. தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றான் - 3யோவா.12






**இவர்களுடைய**
**ஊழியத்திற்காக ஜெபியுங்கள்**

**R.IMMANUVELRAJ, Evangelist**
**CHURCH OF CHRIST**
**RC Nagar Hospital Street**
**Elapakkam - 603 201**
**CHENGALPATTU DT**
**Cell:93841 49979**




**the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்**

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509









**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 அக்டோபர் - 2022 கனி - 11


**ஆசிரியருரை**

## மேலானவைகளைத் தேடுங்கள், மேலானவைகளையே நாடுங்கள்
## Seek Those Things Which Are Above



நீங்கள் எவைகளைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள், எவைகளை நாடிக்கொண்டிருக்கிறீர்கள். பரிசுத்த வேதம் செல்லுகிறது; "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்" என்று (கொலோ.3:1,2) வாசிக்கிறோம். இவ்வுலகத்தில் நம்மை பாவத்திலிருந்து மீட்கவந்த ஆண்டவர் இயேசு நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். நீங்கள் அவரோடு ஞானஸ்நானத்திலே எழுந்தவர்களாயிருக்கிறீர்கள். அப்படி அவரோடு எழுந்ததுண்டானால் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைப்போல மேலானவைகளையே நாடவேண்டும். "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ.3:3,4). இந்த நம்பிக்கையோடு காத்திருக்கிறீர்களா? சதா உலகத்தையும், அதிலுள்ளவைகளையும் நினைத்துக்கொண்டு சோர்ந்துபோகாதிருங்கள்.

நம்முடைய குடியிருப்பு நித்திய நித்தியமாக தேவனோடிருக்கிறது. அங்கிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். அவர் சீக்கிரத்திலே வருவார். அவருடைய வருகையின்போது நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். "ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும். பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1தெச.4:16). அநேகருக்கு இயேசுவின் வருகையின்போது மரித்தவர்களுடைய நிலைமை என்னவாகும் என்ற சந்தேகம் இருக்கிறது. வேதம் மிகத்தெளிவாக நமக்கு போதிக்கிறது. அவருடைய வருகையின்போது முதலாவது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுப்பப்படுவார்கள். பின்பு நாமும் அவரோடு எடுத்துக்கொள்ளப்படுவோம். இப்படி மேலானவைகளை எதிர்பார்த்துக்காத்திருக்கிற நாம் கீழானவைகளைப் பார்த்து வீணாய்போய்விடாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிற நாம் அழித்துப்போடவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. அவைகள் எவையென்றால்; "விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ.3:5). இவைகளை நம்முடைய அவயவங்களில் நாம்

அழித்துப்போடாமல் இருந்துகொண்டு மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இயலாது. இவைகள் நம்முடைய ஆத்துமாக்களை கறைப்படுத்தக்கூடியவைகள். இவைகளை உங்களுடைய சரீரத்திலே உண்டுபண்ணுகிறவன் பிசாசு. அவன் மாம்சத்தின் இச்சையையும், கண்களின் இச்சையையும், ஜீவனத்தின்பெருமையையும் உண்டுபண்ணி உங்களை மேற்கண்ட பாவங்களுக்கு உட்படுத்துவான். இவைகளை உங்களுடைய சரீரத்தில் அனுமதியாதிருங்கள். பாவத்தையும், பாவத்தை தூண்டுகிற பிசாசின் செயல்பாடுகளையும் உங்களைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும். "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என்று ஆண்டவர் சொல்லும் போதனை எவ்வளவு அருமையானது (மத்.18:9). நாம் இரண்டு கண்கள் உடையவர்களாக எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள், மேலான ஆசீர்வதத்துக்குள் பிரவேசிப்பது மேன்மையாயிருக்குமல்லவா? ஆகையால் உங்கள் அவயவங்களில் பொல்லாப்பானதை உண்டுபண்ணுகிறவைகளை அழித்துப்போட தயங்காதிருங்கள். இவைகளை அழித்துப்போடாதிருந்தால் என்ன நேரிடும்? "இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்" என பவுல் நினைப்பூட்டுகிறான் (கொலோ.3:6,7). தேவ கோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ள சகல அசுத்தத்தையும் உண்டுபண்ணும் அவயவங்களை களைந்துபோட்டு, கிறிஸ்துவின் உன்னதமான சரீரத்தைத் தரித்த வர்களாகயிருங்கள்.

மேன்மையானவைகளை நாடுகிற நாம் விட்டுவிடவேண்டியவை என்னவென்று பார்க்கும்போது; "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" எனக் காண்கிறோம் (கொலோ.3:8). கோபம் அநேகருடைய இல்லத்தில் குடிகொண்டிருக்கிறது. என்னசெய்வது திடீரென டென்சன் ஆகிவிடுகிறேன் என்ன செய்வதென்று தெரியவில்லை என்று சொல்லிக்கொண்டே டென்சன் ஆனால் எப்படி? அவைகளைக் குறைக்கவும் கோபம் கொள்ளாமல் இருக்கவும் முயற்சிக்கவேண்டும். நெருப்பு பற்றியெறியும்போது ஐயோ! நெருப்பு பற்றியெறிகிறதே என்று சொல்லிக்கொண்டே இருந்தால் எப்படி? அவைகளை அணைக்க முயற்சிக்கவேண்டுமல்லவா? எனவே வாழ்க்கையில் ஏற்படும் கோபத்தை குறைக்க வேண்டும். அதைப்போல பொறாமை, தூஷணவார்த்தைகள் இவைகளையெல்லாம் விட்டுவிடும்போது பிதாவின் மெய்யான குமாரர்களாகவும், குமாரத்திகளாகவும் காணப்படுவோம். "மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" என வேதம் சொல்லுகிறது (யாக்.1:20). ஆம், தேவனுடைய நீதி கோபத்தில் அல்ல குணத்தில் இருக்கிறது. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்லுகிறது. சண்டையிடுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று என்று வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. ஆகையால் நீங்கள் தேவனுடைய ஜனங்களாக இருப்பீர்களானால் தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியுங்கள். அநேகராலே நற்சாட்சி பெறத்தக்கதாக, மேலானவைகளை நாடுங்கள், தேடுங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.

நாம் களைந்துபோடவேண்டியவைகள் எவைகளென்றால்; "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு" எனக் காண்கிறோம் (கொலோ.3:9). பல வருடங்களாக கிறிஸ்தவர்களாக இருந்தும் பழைய சுபாவங்கள் அநேகரை விட்டுவிடாமல்

தொற்றிக்கொண்டிருக்கிறது. காரணம், அவர்கள் இன்னும் களையவேண்டிய காரியங்களை களையவில்லை. இயேசு நம்முடைய பழைய பாவங்களை மன்னித்தார். ஆனால் நாம் அவைகளை மீண்டும் செய்யாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். பொய் என்பது மனிதனை விட்டு நீக்கமுடியாத ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக நான் பொய்பேசாமல் இருக்கமுடியாது என்று சொல்லக்கூடாது. ஏனெனில் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் என போதிக்கப்படுகிறோம். அந்தப்படியாக பொய்யைக் களைந்து பிறனுடன் மெய்யைப்பேசவேண்டும். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்ற வசனத்தின்படி அவன் புதியமனுஷனாயிருக்கிறான் (2கொரி.5:17). தேவன் கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனை ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார் என்று பார்த்தீர்களா? இந்த ஆசீர்வாதத்திற்குப் பாத்திரவான்களாக புதிய மனுஷனாக நடந்துகொள்ளுகிறீர்களா? அநேகர் காய்ந்த பாவியாக இருந்து ஞானஸ்நானத்திற்கு பின்பு நனைந்த பாவியாக வெளியே வருகிறார்கள். இது எத்தனை வேதனையாக இருக்கிறது. ஞானஸ்நானத்தில் தேவனுடைய பிள்ளையாக பிறக்கிறோம். ஒரு குழந்தை பிறந்தவுடன் எவ்வளவு சந்தோஷம் கொள்ளுகிறோம். அந்த குழந்தையின் முகத்தைப் பார்க்க உறவினர்களும் நண்பர்களும் வருகிறார்கள். அந்த புதிய முகத்தைப் பார்க்கவும் அதனுடைய அழகான உருவத்தைப் பார்க்கவும் வருகிறார்கள். ஒரு பாவி மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கும்போது இந்தவிதமாக பிறந்தால் அது எத்தனை ஆசீர்வாதத்தை அந்தக்குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் கொண்டுவரும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நாம் தரித்துக்கொள்ளவேண்டியவைகள் எதுவென்றால்; "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" என சொல்லப்பட்டுள்ளது (கொலோ.3:10). ஆதாம் தேவசாயலை ஏதேன் தோட்டத்தில் இழந்தான். அதை மீண்டும் பெற்றுத் தரும்படியாக இயேசு இப்பூமிக்கு வந்தார். பாவத்தில் மரித்துக்கிடந்த மனுஷனை அவருடைய இரத்தத்தினால் மீட்டு எடுத்தார். அவர் மீட்டு எடுத்தபடியால் நாம் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகிறோம். கிறிஸ்தவன் கிறிஸ்துவை உடையவனாக இருக்கிறான். கிறிஸ்துவை தரித்தவனாயிருக்கிறான். அவன் தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டான். இப்படி நீங்கள் கிறிஸ்துவையும் அவருடைய சாயலையும் தரித்து புதிய மனுஷனாயிருக்கிறீர்களா? "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்கிறார் (கலா.3;27). அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று உள்ளார்களா என்று கேட்டால் எனக்கு சின்னவயதிலே கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அன்பானவர்களே, கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத்தரித்துக்கொண்டீர்களே என்கிறார். நன்மை தீமை அறியத்தக்க பருவம் வந்தபின், பாவமன்னிப்புக்கென்று எத்தனைபேர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்களோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்தவர்களாக கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு.. இவையெல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்" (கொலோ.3:12,14). இப்படி நாம் தரித்துக்கொள்ள வேண்டியவற்றை தரித்துக்கொண்டு மேலானவைகளைத் தேடுவோம்.

மேலும், நாம் மன்னிக்கவேண்டியவைகள் எவைகளென்றால்; "ஒருவரையொருவர் தாங்கி, ஒவருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோ.3:13). ஒரு கிறிஸ்தவன் மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கிறிஸ்து நம்முடைய பாவத்தை மன்னித்திருக்கும்போது நாமும் மற்றவர்களுடைய பாவங்களை மன்னிக்க கற்றுக்கொள்ளவேண்டும். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16). நாம் குணப்படவேண்டும் என வேதம் போதிக்கிறது. அதற்கான வழி ஒருவர் குற்றத்தை ஒருவர் மன்னியுங்கள். இதைச் செய்வீர்களா? செய்து தேவஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கடைசியாக: மேலானவைகளைத் தேடிக்கொண்டும் நாடிக்கொண்டும் இருக்கிற நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டுமென வேதம் எதிர்பார்க்கிறது. "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ.3:15). தேவன் நமக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கிறார். அவைகளை எண்ணி நாம் ஒவ்வொரு நாளும் நன்றியுள்ளவர்களாக ஒரே சரீரமாக இருந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தவேண்டும். "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்" (1கொரி.1226). ஆகையால், நீங்கள் இசைந்த ஆத்துமாக்களாக ஒன்றையே சிந்தித்து அந்த மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

**தேவன் எனக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று ஒருவர் சொல்லிவிடமுடியுமா?**

முடியாது. ஏனெனில், ஒவ்வொரு நாளும் எத்தனையோ நன்மைகளை அனுபவிக்கிறோம். "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" என 2கொரி.9:15-ல் வாசிக்கிறோம். அவ்வளவு நன்மைகளை தேவன் நமக்குச் செய்துள்ளார். அவருக்கு ஸ்தோத்திரம் சொல்லி ஜெபிப்போம்.

## நடப்புச் செய்திகள்

- **கட்டணமில்லா பயணம் மகளிர் வாழ்வில் வசந்தம் வீசுகிறது**
- **ஆப்கனில் 2.3 கோடி இணையதளங்களை முடக்கிய தலிபான்கள்**
- **அரை நூற்றாண்டுக்கு பின் மீண்டும் மனிதனை நிலவுக்கு அனுப்பத் தயாராகும் நாசா!**

## நான் யார்? – Who Am I?



- நான் திரளான ஜாதிகளுக்கு தகப்பன்
- தேவன் என்னை சிநேகிதன் என்றார்
- பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் என் பெயர்இடம் பெற்றுள்ளன
- இயேசுவின் நாளை காண ஆசையாயிருந்தேன்
- விசுவாசமார்க்கத்தார்கள் என்னோடு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்
- 100 வயதில் பிறந்த என் மகனை பலியிட அழைத்துச்சென்றேன்
- பிறனுக்குண்டான சரட்டைக்கூட நான் இச்சிக்கவில்லை



# கெட்ட வார்த்தை

## Bad Language

-J.C.Choate

**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

கெட்ட மொழியின் இன்னொரு வடிவம் அசுத்தமான நகைச்சுவைகளைச் சொல்லுவது. ஆபாசமான, வேடிக்கையான கதையைச் சொல்ல தயாராக இருக்கும் யாரோ ஒருவர் எப்போதும் சுற்றி இருப்பதாகக் காணப்படுகிறது, ஆனால் அசுத்தமான எண்ணங்களை மனதிற்குள் கொண்டுவரும் சிலவற்றைப் பற்றிய வேடிக்கையானவைகள் எவை? நாம் இந்தவிதமான முயற்சிக்கப்பட்ட கேலிப்பேச்சுக்களைக் கேட்கும் போது நாமனைவரும் அதை எதிர்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் சாக்கடையான எண்ணங்களின் மூலம் நம்முடைய ஐக்கியத்தை அவைகள் கெடுத்துவிடக்கூடியதாக இருக்கலாம். ஆனால் நாம் ஆபாசமான கேலிப்பேச்சுகளைப் பேசினாலே அல்லது அவைகளைக் கேட்கும்போது சிரித்தாலே இயற்கையாகவே ஆபாசமான பழக்கம் தொடரும்.

இந்த அசுத்தமான கேலிப்பேச்சுகளில் ஆபாசமானவை மட்டுமல்லாது பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய மொழியும் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் மக்கள் பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய வார்த்தைகளை தங்களுடைய பொதுவான உரையாடல்களில் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். இந்தவிதமான மொழி பொது இடத்தில் அநேகருக்குள்ளே உண்டாயிருக்கிறபடியால் நமது சமுதாயம் மிகத் தாழ்வான நிலைக்குள் மூழ்கிக் கொண்டிருக்கிறது என மிக வருத்தமாக இருக்கிறது.

இக்கால கட்டத்தில் இவ்விதமான கேலிப்பேச்சுகளை கேட்பதும் அதைப்போல் அசுத்த வார்த்தையும் தொலைக்காட்சி, சினமா, புத்தகம் மற்றும் செய்தித்தாள் கட்டுரைகளிலும் சர்வசாதாரணமாக இடம் பெற ஆரம்பித்திருக்கிறது. இது கண்ணியமான மக்களையும் விரும்பி ஏற்றுக்கொள்ள செய்கிறது, ஆனால் நாம் சிறுபான்மையினர் என்று நான் பயந்திருக்கிறேன்.

வருந்தத்தக்கவாறு, குழந்தைகள் இது எப்பேர்பட்ட தவறு என்று கொஞ்சமும் உணராதவர்களாக இந்தவிதமாக மொழியை விருப்பத்தோடே தெரிவு செய்து ஆபத்து நேரக்கூடிய ஒரு சூழ்நிலைக்குத் தங்களை மீண்டும், மீண்டும் உட்படுத்திக் கொள்ளுகின்றனர். அப்போஸ்தனாகிய பவுல் தீமோத்தேயுக்கு, " உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" (1தீமோ.4:12) என்றான். எனவே பவுல் சொல்லுகிற இக்காரியத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும், எப்போதும் நல்வார்த்தைகளைப் பேசி மாதிரியாகயிருக்க வேண்டும், வெளியே எந்த இடத்திலிருக்க நேரிட்டாலும் எவரும் கேட்பதற்குக் கூசக்கூடிய தகாத காரியங்களைப் பேசாதிருக்க வேண்டும். மீண்டும் நாம் "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டு மென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" (கொலோ.4:6) என்று வாசிக்கிறோம்.


பவுல் கூட, "நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும்,

நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (தீத்து 2:7,8).

எப்போதும் குற்றங்கண்டுபிடித்தல், பொய்பேசுதல் போன்ற மற்றவர்களைப் பற்றி பேசும் வீண் பேச்சும் கூட கெட்ட மொழியினுடைய இன்னொரு வடிவமாகும். யாக்கோபு 3ம் அதிகாரத்தில் யாக்கோபு நாவைப் பற்றி விவாதிக்கிறான். அவன் குதிரைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு அவைகளை நாம் அடக்கலாமென்றும், நாம் பெரிய கப்பல்களை சுக்கானால் திருப்பலாம் என்றும் ஆனால் நாவு சிறிதாயிருந்தாலும்கூட, அதை அடக்குவது மிகக்கடினம் என்று சொல்லுகிறான்.

அவன் தொடர்ந்து சொல்லுகையில், "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திரட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமைபாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதனத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" (யாக்.3:9-18) என்றான். இறுதியாக, பவுல் "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கொலோ.3:9,10) என்கிறான்.

நன்மையானாலும் தீமையானாலும் நாம் சொல்லிருக்கிறவைகளுக்கு ஒரு நாளில் கணக்கொப்புவிக்க வேண்டுமென்பதால் நாம் சொல்லுகிறவற்றைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் நமக்குச் சொல்லுகிறார். கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்தவர்களைப் பார்த்து "விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார் (மத்.12:34-37).



# நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன்
## I Won`t Apoligize

*-Betty*

ஒருவன் சச்சரவுகளில் அநீதியான வழியைச் சார்ந்திருக்கின்ற அல்லது மற்றவர்கள் மீது கெட்ட நடவடிக்கைகைகளைக் காண்பிக்கின்ற வேளையில் குற்றத்தை ஒத்துக்கொள்ள மறுத்தல் - இது 'மனித' இயல்பாக இருக்கலாம் அல்லது இது ''குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதின் மூலம் நான் குற்றவாளியாய் இருக்கிறேன் என்று ஒத்துக்கொள்ளாவிட்டால், அப்புறம் இது மற்ற மனிதனுக்கு பிரச்சனையைத் தீர்க்க வழி ஏற்படுத்தாது'' என்ற மனநிலை வளர்ந்து கொண்டேயிருக்கலாம்.

முகத்தோற்றத்தையும் இருதயத்தையும் தெளிவுபடுத்தாதிருக்கும் எந்த அடிப்படைக் காரணமும், 'என்னை மன்னித்துவிடு' என்ற எளிய வார்த்தைகள் சண்டை நேரத்தினை முறியடிக்கும் நல்ல விளைவாக இருக்கிறது.

மனிதர்கள் வித்தியாசமான கோணத்தில் ஒருவருக்கொருவர் மிகப்பெரிய வேறுபாட்டுடன் இருக்கின்றனர். வழக்கமாக ஒரு நிச்சயிக்கப்பட்டவற்றிலிருந்து காரணமில்லா விரோதநோக்குடைய கருத்தினை மற்றவற்றில் அல்ல நம்முடைய சுய காரியங்களில் காண்கின்றோம். கணவனும் மனைவியும் அந்நியர் மத்தியில் அல்லது வேலை செய்யும் அலுவலகத்தில் வழக்கமாக காணப்படாத நாகரிகமற்ற பிரச்சனைகளை அடிக்கடி சந்திக்கின்றனர். கணவனும் மனைவியும் நாளுக்கு நாள் தங்களுடைய கஷ்டங்கள், சோர்வுகள், சவால்கள், ஏமாற்றங்கள் அடிக்கடி வார்த்தைகளாக வெடிக்கின்றன. மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன, வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன, வேதனைகள் பாரமாக்கப்படுகின்றன, கண்ணீர்கள் சிந்தப்படுகின்றன யாரோ ஒருவர் தவறிழைத்து விட்டார்.

ஆனால் யார் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுவார்? ஒருவேளை யாரும் நேர்மையுடன், உணர்வடைந்து 'நான் தவறிழைத்து விட்டேன் நான் அதைச் சொல்லியிருக்கக்கூடாது' என தங்களை நிதானித்துப் பார்க்கமாட்டார்கள். பதிலாக, ஒரு குளிர்ச்சியான மௌனம் ஒரு வேளை சச்சரவினை முடிவுக்குக் கொண்டு வரும், பின்பு இருவரும் தங்களுடைய சொந்த வேலைக்குத் திரும்புவார்கள். நேரங்கள் கடந்து செல்லும், குளிர்ந்தநிலை இருவருடைய இருதயத்திற்குள் ஆழும் ஆழுமாக சென்று முடிவை உண்டாக்கும். ஒரு வேளை அடுத்தநாள், அல்லது அதற்கடுத்த நாள், காரியங்கள் ஒரு வழியாக மறுபடியும் சீராகக் காணப்படும். உரையாடல் பழைய நிலையைக் கொண்டுவரும். வாழ்க்கை தொடர ஆரம்பிக்கும்.

ஆனால் இருவருடைய இருதயங்களில் என்ன நடந்திருக்கின்றது? காயங்கள் உண்டாக்கப்பட்டது, பாதுகாப்பிற்கென்று கடினமான உணர்ச்சியற்ற நிலை உருவாக்கப்பட்டது. சுகமாக்கும் நிவாரணி உபயோகிக்கப்படவில்லை, எனவே நிரந்தர வடுக்கள் ஏற்பட்டுள்ளன. கடினமான உணர்ச்சியற்ற நிலையிலும், வடுக்களின் அடியிலும் புதைக்கப்பட்டவைகள் கோபம், மனக்காயம், மனக்கசப்பு போன்றவைகள் ஒரு வளருகின்ற ஒரு வேராக இருக்கின்றது.

அடுத்த முறை கோபம் வெளிப்படுகிறது, இது முந்தின சண்டையில் கொழுந்துவிட்டு எரிகின்றவையான கசப்பின் அடுக்கினை ஒளிவிடச்செய்கிறது- மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு ...

எனவே திரி அணைகிறது, கோபம் அதிவேகமாக வெடிக்கிறது, கசப்பு மிகக் கசப்பாகின்றது- சண்டை மிக மோசமாகின்றது. கணவனும், மனைவியும்

சண்டையிட்டுக்கொண்டிராதிருந்தாலும் கூட எப்பொழுது அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் மனக்கசப்பில் வளருவார்கள்? இருவருக்கிடையே ஒருவர் இன்னொருவரை விட மிகச்சிறந்தவராக எப்பொழுது நினைப்பார்கள்? இவைகளெல்லாம் திருமண வாழ்விற்குள் அல்லது விவாகரத்தின் முடிவில் பேதத்தினால் ஏற்படும் விளைவாகிய இவைகளெல்லாம் அடிப்படை பிரச்சனைகளாக இருக்கின்றன.

கணவன் மனைவி இருவரும் திரும்பிச் சென்று குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்ற தங்களுடைய தீர்மானத்தைக் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். 'என்னை மன்னித்துக் கொள்' - இப்பேர்பட்ட எளிய வார்த்தைகள், சொல்லுவதற்கு மிக சுலபமானது, மிகவும் சத்திவாய்ந்தது!

'என்னை மன்னித்துக்கொள்' என்று நேர்மையுடன் கூறுவது என்ன விளைவை ஏற்படுத்துகிறது? முதலாவது, இது நேர்மையுடையதாக இருக்குமானால், இது ஒருவருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கின்ற மற்றும் ஒருவர் ஒரு சார்புடையவராக அல்லது இருவர் மேலும் குற்றம் உண்டு எனவும் தீர்மானிக்கின்ற முடிவினை கொண்டுவரும். தவறை ஒப்புக்கொள்ளுகின்ற செயல் தவறான பெருமையை அழித்து, தாழ்மையான மனநிலையினை உருவாக்கும். தன் குற்றத்திற்காக மனவருந்தும் இந்த மனநிலையுடனும், குற்றத்தை ஒத்துக்கொள்ளக்கூடிய இந்த வலி நிவாரணியுடனும், இருவருடைய இருதயங்களில் குணமாக்கும் செயல் ஆரம்பிக்கும். மனக்கடினத்தின் அடுக்குகள் மற்றும் மனக்கசப்பினால் குமுறிக்கொண்டிருக்கும் ஜுவாலையும் உருகிப் போய்விடும், மேலும் கடந்த காலத்தின் பிரச்சனைகளின்றி உள்ளான சமாதானத்தின் உணர்வுகளால் நாளுக்கு நாள் நல் உறவு முன்னேற்றமடைந்து கொண்டே செல்லும்.

எபேசியர் 4:26-ல், ஆவியின் தூண்டுதலினால் பவுல் இவ்வார்த்தைகளை எழுதினார், "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது". இந்த வார்த்தைகளின் பொருள் என்ன? முதலாவது, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கோபங் கொள்ளக் கூடாது என அவர் கூறவில்லை, அல்லது கோபங்கொள்ளுவது பாவம் என்றும் கூறவில்லை. இவ்வுலகில் தவறான காரியங்கள் பல இருக்கின்றன, மேலும் அவைகளின் மேல் கோபங்கொள்ளுவது நீதியுள்ளதும் சரியானதுமாக இருக்கிறது. ஆனால் பவுல் சொன்னார், "உங்களுடைய கோபம் பாவஞ்செய்வதற்கு இடங்கொடாதீர்கள்!" அது முழுவதும் வித்தியாசமானது. மேலும் அதிகமான ஜனங்கள் செய்யக்கூடியதும் அதுவே!

நான் ஒரு கணவனுக்குரிய நிலையினை, மனைவியினிடத்தில் கண்டிப்பு மற்றும் முன்கோபத்துடன் நடந்துகொண்ட அவளுடைய கணவனிடத்தில் கண்டிருக்கிறேன். இயற்கையான பதில் மனைவியினுடைய பங்கிலும் அதே கண்டிப்பான ஜுவாலையினை அதிகமாக தூண்டிவிட்டதைப் போல் இருந்திருக்கும். மாறாக அவள் நீதிமொழிகள்15:1-ல் சாலொமோனால் பேசப்பட்டது போல நடந்து கொண்டாள்: "மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்". பிரதியுத்திரமாக, அவள் அவர்களுக்கிடையே கோபத்தினை சகஜநிலைக்கு மாற்றிவிட்டாள், ஏனென்றால் அவள் தன் கணவன் நியாயமாக யோக்கியத்துடன் நடந்து கொண்டது போல அவள் அவனுக்குப் பதிலளிக்கவில்லை.

ஆம், அதுவே பொறுமையோடு பதிலளித்தல், மற்றும் சமாதானத்தை நாடுதல் போன்றவை கோபத்தில் சவுக்கடி கொடுப்பதைக் காட்டிலும் பிரச்சனைகளை விலக்குவதற்கு ஒரு திறவுகோலாயிருக்கிறது. பவுலுடைய எச்சரிப்பின் இரண்டாவது பாகம் நாம், 'சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாகவே நம் எரிச்சல் தணியவேண்டும்" என்பதாகும். நீங்கள் கோபமனதுடனே உங்கள் படுக்கைக்குச் சென்றால், நீங்கள் விழித்தெழும்போது நீங்கள் இன்னும் மோசமான உணர்வடைந்ததை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? எனவே தான் வெகு நீண்ட நாட்களுக்கு மேலாக நமக்குள் கோபம் குடிகொண்டிருக்க அனுமதிக்கக் கூடாது என வெளிப்படையாகவே நாம் எச்சரிக்கப்படுகிறோம். இது அழித்து விடும்.

## **விசுவாச வீரர்கள்** – Knights of Faith

எபி.11:6 விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நாம் அவருக்குப் பிரியமாயிருப்பது மிகமிக அவசியம். உலகத்துக்கு பிரியமாயிருக்கிறவர்கள் தேவனுக்குப்பிரியமாயிருக்க முடியாது. ஏனென்றால் "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்று 1யோவா.2:15 கூறுகிறது. ஆகையால் உலகத்துக்கு பிரியமாயிருக்க நாம் விருப்பம் கொள்ளாமல் தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்யவே நாட்டம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். எனவே நாம் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். எனவே தான் எபிரெயர் 1:16 "நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்று உரைக்கிறது. ரோமாபுரியிலிருந்த சபையாருக்கு பவுல் எழுதும்போது; அவர்களை "தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுக்கும்" என்று குறிப்பிடுகிறார் (ரோம.1:2). மேலும் 2தீமோ.3ம் அதிகாரத்தில் "கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்றும் அவர்கள் தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு என்று எச்சரிக்கிறார் (2தீமோ.3:1,4,5) இது முக்கியமான எச்சரிக்கை. இவர்கள் அவிசுவாசிகளாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அவிசுவாசிகளோடே நாம் ஐக்கியமாயிருக்கக்கூடாது. ஏனென்றால் 2கொரி.6:15ல் அப்போஸ்தலனாகிய பவுல்: "கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?" என்று தொடர் வினாக்களை எழுப்புகிறார். "நாமோ கெட்டும்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல் ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" (எபி.10:39).


மேலும் தேவனாகிய கர்த்தர் எசேக்.20:37-40 வசனங்களில் "நான் உங்களை கோலின் கீழ் செல்லும்படி செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக் குட்படுத்தி கலகக்காரரையும் துரோகிகளையும் உங்களை விட்டுப் பிரித்துப்போடுவேன்; அவர்களைத் தாங்கள் தங்கும் தேசத்திலிருந்து புறப்பப்பண்ணுவேன்; ஆனாலும் அவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் பிரவேசிப்பதில்லை; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். இப்போதும் இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் என் சொல்லைக் கேட்க மனதில்லாதிருந்தால், நீங்கள் போய், அவனவன் தன் தன் நரகலான விக்கிரகங்களை இன்னும் சேவியுங்கள்; ஆனாலும் என் பரிசுத்த நாமத்தை உங்கள் காணிக்கைகளாலும் இனிப் பரிசுத்த குலைச்சலாக்காதிருங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இஸ்ரவேலின் உயரமான மலையாகிய என் பரிசுத்த மலையிலே இஸ்ரவேலுடைய எல்லா வம்சத்தாருமாகிய தேசத்திலுள்ள அனைவரும் என்னைச் சேவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அங்கே அவர்கள் மேல் பிரியம் வைப்பேன்; அங்கே நீங்கள் பரிசுத்தம் பண்ணுகிற எல்லாவற்றிலும் உங்கள் காணிக்கைகளையும் உங்கள் முதற்பலன்களையும் செலுத்தும்படி கேட்பேன்" என்கிறார். தேவனாகிய கர்த்தரை சேவிக்கிறவர்கள் மேல் அவர் பிரியம் வைப்பார் என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் அதை தொடர்ந்து வரும் வசனத்தில் "நான் உங்களை ஜனங்களிலிருந்து புறப்படப்பண்ணி நீங்கள் சிதறுண்டிருக்கிற தேசங்களிலிருந்து உங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, சுகந்த வாசனையினிமித்தம் நான் உங்கள் பேரில் பிரியமா யிருப்பேன்; அப்பொழுது புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உங்களால் பரிசுத்தம் பண்ணப்படுவேன்" என்றும் தேவன் உரைத்திருக்கிறார் (எசே.20:41). **– தொடரும்**

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

**Bible Characters**

7



## பரிசுத்த வேதாகமத்தில் லோத்

## Lot In The Holy Bible

1. ஆபிரகாமின் சகோதரனாகிய ஆரானின் மகன் - ஆதி.11:27
2. கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான் - ஆதி.12:4
3. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று - ஆதி.13:7
4. லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து; யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான் - ஆதி.13:10,11
5. தன் சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவந்தான் - ஆதி.14:16
6. இரண்டு தேவதூதர்களை வீட்டுக்கு அழைத்தான் - ஆதி.19:1-3
7. இந்தப் புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம் என்றான் - ஆதி.19:4-8
8. அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் - ஆதி.19:26
9. லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும் - லூக்.17:28
10. நீதிமானாகிய லோத்தை இரட்சித்தார் - 2பேது.2:8

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***லோத்தின் புத்திரர் தேவனுக்கு பகைஞர் ஆனார்களா?***

**விடை:** ஆம், "...ஏதோமின் கூடாரத்தாரும், இஸ்மவேலரும், மோவாபியரும்...உமக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்... அசீரியரும் அவர்களோடேகூடக் கலந்து, லோத்தின் புத்திரருக்குப் புயபலமானார்கள்" (சங்.83:1-8).



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

8



### பரிசுத்த வேதாகமத்தில் யாக்கோபு
### James In The Holy Bible

1. அப்போஸ்தலர்களில் ஒருவன் செபதேயுவின் மகன் - மத்.10:2
2. சீமோனின் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள் - லூக்.5:10
3. உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப்பின்சென்றார்கள் - மத்.4:21,22
4. 7பேர் மீது கைகளை வைத்து ஜெபித்த அப்போஸ்தலர்களில் ஒருவன் யாக்கோபு - அப்.6:2-7
5. இயேசு பரமேறிய பின் கூடிய முதல் சபையில் மேல் வீட்டில் ஏறினார்கள் அதில் யாக்கோபும் இருந்தான் - அப்.1:13
6. செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார் - மாற்.3:17
7. இவனுடைய தாய் இயேசுவின் வலது இடது புறம் உட்கார இரண்டுபேருக்கும் அனுமதிகேட்டாள் - மத்.20:20,21
8. இயேசு மறுரூபமாகும்போது அங்கேயிருந்தான் - மத்.17:1,2
9. இயேசுவோடு மிகவும் நெருக்கமானவர்கள் - மத்.26:37
10. இவன் பட்டயத்தினாலே கொலைசெய்யப்பட்டான் - அப்.12:1,2

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

*எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்றவர்கள் யார்?*

**விடை:** யாக்கோபும், யோவானும் "...ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்" - லூக்கா 9:54



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



*தற்சோதனை பகுதி - 49*

**49. கிறிஸ்துவின் உபதேசத்தை குறித்து வேதாகம போதனை என்ன?**

1. ஒருவன் இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால் அவனை ஏற்றுக்கொள்ளவும் வாழ்த்துதல் சொல்லவும் கூடாது ☐ வசன ஆதாரம் -
2. கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லை ☐ வசன ஆதாரம்----------------
3. என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது என்றார் இயேசு ☐ வசன ஆதாரம்-
4. ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் குறித்து ஆச்சரியப்படவில்லை ☐ வசன ஆதாரம் --------------------------
5. நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார் ☐ வசன ஆதாரம்---------------------------
6. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறார்கள் என்று ஏசாயா சொல்லவில்லை ☐ வசன ஆதாரம்---------------------------
7. இந்த புதிய உபதேசம் எப்படிப்பட்டது? என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள் ☐ வசன ஆதாரம்---------------------------
8. பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்து இயேசு எச்சரிக்கவில்லை ☐ வசன ஆதாரம்------------------------------------
9. செர்கியுபவுல் என்ற அதிபதி கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான் ☐ வசன ஆதாரம்------------------
10. தேவபக்திக்கேற்ற உபதேசங்களை ஒப்புக்கொள்ளாமல் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவர்கள் இறுமாப்புள்ளவர்களல்ல ☐ வசன ஆதாரம்------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**


**வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு** - Jim Massey – *மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

## பாடம் 28

### பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு மூப்பர்களை உருவாக்குகிறார்?

### வரைகுறிப்பு

1. சரியான போதனை
2. சரியான வாஞ்சை
3. சரியான நிரூபணம்
4. மனுஷரை குறித்து எச்சரிக்கையாயிருத்தல்
5. நியமித்தல் அல்லது ஏற்படுத்துதல்
6. சபையினாலே அங்கீகாரம்




### கலந்துரையாடல்

**1. சரியான போதனை:**

கிறிஸ்தவமானது ஒரு போதிக்கப்பட்ட மார்க்கமாக இருக்கிறது (யோவா.6:45). விசுவாசிகளுக்கு ஞானஸ்நானத்திற்கு முன்பும், ஞானஸ்நானத்திற்கு பின்பும் போதிக்கப்படுகிறது (மத்.28:19,20). மூப்பர்கள் தகுதியடைவதற்கும், அதிகமான நெடிய மற்றும் ஜாக்கிரதையுள்ள போதனை தேவையாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் மனுஷர்களை கண்காணிகளாக்குகிறார் (அப்.20:28). பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை உருவாக்கும் விதம் ஆவியின் பட்டயமாகிய வேதாகமத்தின் படியானதாயிருக்கிறது (எபே.6:17). பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட வேதவாக்கியங்கள் போதனையை அளிக்கின்றன, அவை சபையிலே மனுஷரை மூப்பர்கள் ஆக்குகின்றன. ஆனால் வேதாகமம் போதிக்கப்பட்டால் இந்த முறைமை மட்டுமே பெலனுள்ளதாக இருக்க முடியும். ஆகையால் இந்த முறைமை அத்தியாவசிய மானதாயிருக்கிறது. எனவே ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மனுஷர்களை மூப்பர்களாக்கும் தேவனுடைய போதனையானது போதிக்கப்பட வேண்டும். சபையின் அமைப்பை குறித்த வேதாகம போதனையானது முழுமையாக புரிந்து கொள்ளப்பட வேண்டியது அவசியம். ஒவ்வொரு அங்கத்தினரும் அலுவலர்களின் ஸ்தானம் மற்றும் பணியை அவசியம் அறிந்தவர்களாயிருக்க வேண்டும். சரியான ஆளுகைக்காக சபையை ஆயத்தம் செய்யும்படியாக அநேகம் வகுப்புகள், தனிப்பட்ட பாடங்கள் மற்றும் பிரசங்கங்கள் ஆயத்தமாக்கப்பட்டு போதிக்கப்படவேண்டும். சரியான போதனை இன்றி அங்கே சரியான வடிவமைப்பு இருக்க முடியாது. வேதவாக்கியங்களின் போதனை வேதவாக்கியங்களின் படியேயான ஆளுகைக்கு ஒரு தொடக்கமானபடிக்கட்டாக இருக்கிறது. சரியான உணர்ந்து கொள்ளுதல் நல்ல வடிவமைப்புக்கு அஸ்திபாரமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் சரியான போதனையினாலே மனுஷர்களை மூப்பர்களாக்க தொடங்குகிறார்.

**2. சரியான வாஞ்சை:**

யார் போதிக்கப்படுகிறார்களோ அவர்களிடமிருந்து கிடைக்கும் சரியான பிரதியுத்தரம் இரண்டாவது படியாக இருக்கிறது. இதுவே தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் கிறிஸ்தவர்களில் உண்டாக்குகி றவராயிருக்கிறார் (பிலி.2:13). தேவனுடைய சித்தமானது அங்கத்தினர்களுக்கு போதிக்கப்படுகிற பொழுது அதற்கு பிரதிபலனாக அவருடைய சித்தத்தை செய்ய விரும்புகிறவர்களாக இருப்பார்கள். மூப்பருக்கான தகுதிகள் பட்டியலில் தொடக்கமாக சொல்லப்படுகிறது "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை" (2தீமோ.3:1). ஒரு முதிர்ந்த கிறிஸ்தவனுடைய

குணாதிசயங்களை ஒரு மனுஷன் அறிகிறதினாலே அவன் அவைகளை அடைய பிரயாசப்படுகிறான். மற்றவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறதற்கு உதவியாக இருக்கும்படி செய்யத்தக்கதாக ஒரு பலம் வாய்ந்த கிறிஸ்தவனாக இருக்கும்படி ஒரு பலமான வாஞ்சையை அவன் வளர்த்துக் கொள்ளுகிறான். இவ்விதமாக பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவ குணாதிசயமாகிய கனிகளை உண்டாக்குகிறவராயிருக்கிறார் (கலா.5:22-23). ஆனால் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே ஒரு மனுஷனுக்குள்ளே ஒரு மூப்பராகும்படியான வாஞ்சையை வைக்கிறவர் அல்ல, சாத்தானும் மனுஷருக்கு வாஞ்சையை அளிக்கிறான். ஆனால் ஒரு வித்தியாசமான குறிக்கோளுடனே பிசாசானவன் முதன்மையாயிருக்கும் படியாகவும், வீணான மகிமைக்காகவும் அல்லது பணத்துக்காகவும் கூட மனுஷர் மூப்பராயிருக்க விரும்புகிறதினாலே இவைகளை செய்கிறான். ஆகையால் மூப்பராயிருக்கும்படி விரும்புகிற எல்லா வாஞ்சையும் ஒரு சரியான வாஞ்சையல்ல ஆனால் மனுஷர்கள் கிறிஸ்துவைப்போன்ற ஒரு குணாதிசயத்திற்காக வாஞ்சை கொள்வார்களாகில், ஆவியின் கனிகளை அவர்கள் விரும்புவார்களாகில் அவர் மூப்பர்களாகும்படியாக பரிசுத்த ஆவியானவர் அவர்களை அதற்கு நேராக வழி நடத்துகிறார். இந்த சரியான வாஞ்சை ஒரு மூப்பராவதற்கான ஒரு முக்கிய படியாக இருக்கிறது.

**3. சரியான நிரூபணம்:**

சபையின் வேலையாட்கள் முதலாவதாக சோதிக்கப்பட வேண்டியது அவசியம் (1தீமோ.3:10). இது பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை உருவாக்குகிறதற்கான மூன்றாவது வழி முறையாக இருக்கிறது. ஒரு மனுஷனுடைய சரியான உணர்ந்து கொள்ளுதலும் சரியான வாஞ்சையும் அவனை ஒரு முழுமையான வளர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக இருக்கும்படி அவன் தன்னை வளர்த்துக் கொள்ளும்படியாக வழிநடத்துகிறது. அவனுடைய வளர்ச்சியும், திறமையும் மற்றவர்கள் காணும்படியாக வருகிறது. ஒரு மனுஷன் தன்னுடைய ஜீவியத்தை குறித்தும், தன்னுடைய உபதேசத்தை குறித்தும் எச்சரிக்கையாயிருப்பானேயாகில் அவனுடைய முன்னேற்றம் அனைவருக்கும் காணப்படுகிறதாயிருக்கிறது (1தீமோ.4:15). முன்பு குறிப்பிட்டபடி இந்த செயல்முறை காலத்தை எடுத்துக்கொள்கிறது. ஆவிக்குரிய முதிர்ச்சியானது உடனே வருகிறதில்லை பல வருஷங்களாக வேத பாடம், ஜெபம் மற்றும் வளர்ச்சி அத்தியாவசியமானதாய் இருக்கிறது. ஒருவரை கிறிஸ்தவ வழி நடத்துனர் மற்றும் போதகனாக ஒருவரை தகுதியடையச் செய்கிறதற்கு அதிகமான அனுபவம் தேவையாக இருக்கிறது. இந்த வருஷங்களின் போது ஒரு மனுஷன் தன்னை நிரூபித்துக்கொள்கிறான் அதாவது எல்லாரும் காணும்படியாக கிறிஸ்தவ குணாதிசயங்களை விருத்தி செய்து கொள்கிறான். அதன்விளைவாக மற்ற அங்கத்தினர்களுக்கு அவனை ஒரு கிறிஸ்தவ முன்மாதிரியாக மற்றும் முன்னோடியாக அறிய வருகிறது. ஒரு மூப்பருக்குரிய தகுதிகள் படிப்படியாக பெறப்படுகின்றன காணப்படுகிறன்றன. இது ஒரு மனுஷன் ஒரு மூப்பராக தகுதி பெறுவதற்கு சரியான நிரூபணமாக இருக்கிறது.

**4. மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாய் இருத்தல்:**

எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் முதல் உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக பிராந்திய சபையானது அதிக எண்ணிக்கையிலான மனுஷரைக் குறித்து "எச்சரிக்கையாயிருக்க வேண்டும்" என்று கட்டளையிட்டனர் (அப்.6:3). பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை உருவாக்குவதில் இது நான்காவது படியாக இருக்கிறது. சாத்தியமான தெரிந்தெடுப்பு என்ற பார்வையில் சிந்தனை செய்யும்படியாக தகுதிவாய்ந்த மனுஷர்கள் பிராந்திய சபையிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். பிராந்திய சபையானது இந்த முயற்சி (நடவடிக்கை) எடுக்க வேண்டும் என்பதைக் கவனியுங்கள். சரியான போதனைக்கு பின்பு முழுசபையும் முதிர்ச்சி அடைந்த மனுஷர்களை அதன் சொந்த அங்கத்தினர்களிலிருந்து தேடி அலுவலர்களாவதற்கு தேவையான தகுதி

அனைத்தையும் உடையவர்களை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்விதமாக சபை அங்கத்தினர்கள் தாங்களாகவே தங்களுடைய அலுவலர்களை யாரோ ஒருவர் அவர்களுக்கு மேலாக இருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பதிலாக தேர்ந்தெடுக்க வேண்டும் (அப்.6:5). அவர்கள் தங்களுக்கு மத்தியில் யார் சோதிக்கப்பட்டு நிரூபணம் ஆனவர்களாக காணப்படுகிறார்களோ அந்த மனுஷரை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள் யார் இதை பின்பற்றுவதற்கு சந்தோஷமாக இருக்கிறார்களோ அவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். யார் ஒருவர் அதிகமாக கிறிஸ்துவைப் போல் இருக்கும்படியாக அவரை பிரதிபலித்துக் காட்ட சந்தோஷமாக இருப்பார்களோ அவர்களை பெயர் சொல்லி அழைப்பார்கள். இது ஒரு மிக முக்கியமான படியாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இந்த செயல்திட்டத்தை சபை அங்கத்தினர்களின் இருதயத்தில் வேதவாக்கியங்கள் மூலமாக வழிநடத்துகிறார். அவர்களுடைய தெரிந்தெடுப்பு தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளின் படியானதாயிருக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தையில் காணப்படுகிற தேவனுடைய ஞானத்தை பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள் (கொலோ.1:9). அவர்கள் தங்கள் தெரிந்தெடுப்புக்கு மேலாக ஜெபத்தினாலே தேவனுடைய தெரிந்தெடுத்தலின்படி தங்களை ஆளுகை செய்யும்படி அவரிடம் கேட்கிறார்கள் (அப்.1:24). தெரிந்தெடுப்பை சுட்டிக்காட்டும்படி எந்த அற்புதமும் செய்யப்படுகிறதில்லை, ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலமாக வழிநடத்துகிறவராக இருக்க வேண்டியதாயிருக்கிறது. தேடி கண்டுபிடிக்கப்பட்ட மனுஷருடைய பெயர்கள் சபையாருக்கு முன்பாக வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. பட்டியலின் படி எந்த நபர்கள் இருக்கிறார்கள் என்பதை முழுசபையும் கண்டும் அறிந்தும் கொள்கிறது. இதுவே "மனுஷரை குறித்து எச்சரிக்கையாயிருத்தல்" என்பதன் பொருளாக இருக்கிறது.

**5. நியமித்தல் அல்லது ஏற்படுத்துதல்:**

வேதாகமம் மூப்பர்களை "ஏற்படுத்த வேண்டும்" என்று சொல்கிறது (தீத்து1:5; அப்.14:23). திருத்தப்பட்ட மொழி பெயர்ப்பு "நியமிக்கப்படவேண்டும்" என்று சொல்கிறது இந்த வார்த்தைகள் "பொறுப்பை ஒருவரிடம் கொடுத்தல் அல்லது அறிமுகம் செய்தல்" என்பதை குறிப்பிடுகின்றன. ஏற்படுத்துதல் (Ordaining) என்ற வார்த்தையானது பல நாமகரண சபைகளினால் கெடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடனே இது "கிறிஸ்தவ குருமார் குழுவில் (Clergy) ஒரு நிலையை பற்றிக் கொள்ளும்படியாக ஒரு நபருக்கு உரிமம் வழங்குவதை (Licensing) குறிப்பிடுகிறது. ஆனால் வேதாகமமோ ஒரு "கிறிஸ்தவ குருமார் குழு" அல்லது ஒரு "கிறிஸ்தவ குருமார் குழுவுக்கான உரிமம்" (Clergy License) பற்றியோ குறிப்பிடுகிறதில்லை. புதிய ஏற்பாட்டு பிராந்திய சபையிலே மக்கள் தாங்களாகவே தெரிந்தெடுத்த வேலையாட்களை எளிமையாக சுட்டிக்காட்டுவதாகவே இருந்தது. மூப்பர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னே சுவிசேஷகரால் நடத்தப்பட்டது (தீத்.1:5) பிரசங்கியாரின் தெரிந்தெடுப்பாக இருக்கவில்லை. தெரிந்து கொள்ளுதல் அவராலே நடத்தப்படவில்லை. இது நியமித்தல் என்பதற்கான பொருளாக இருக்கவில்லை. சபையாரால் ஏற்கெனவே மனுஷரைக் குறித்து முழுசபையும் எச்சரிக்கையாயிருந்து தங்களுடைய முன்னோடிகளை (வழிநடத்துகிறவர்களை) அங்கீகாரம் செய்ததை தன்னுடைய குரலில் வெளிப்படுத்துவதை மாத்திரமே சுவிசேஷகர் செய்கிறார். சபையிலுள்ள தகுதிவாய்ந்த மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருந்த பின்பு பிராந்திய சபையானது தானே அந்த நபர்களை ஏற்றுக்கொள்ளுகிறது அல்லது நிராகரிக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினரையும் வேதாகம தகுதிகளின் வெளிச்சத்தில் பரிசீலனை செய்வது அல்லது மறுபரிசீலனை செய்வது தவிர இதற்காக திட்டவட்டமான முறைமை எதுவும் இல்லை. இந்த நபர்களை அங்கீகாரம் செய்வது தொடர்பாக சிந்தனை செய்ய சிலவாரங்கள் ஆகலாம், ஏனென்றால் ஆரம்பம் முதல் இறுதிவரையிலும், அது முழுமையானதாக இருக்கவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அலுவலர்கள் இறுதியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிற பொழுது அவர்களுடைய தேர்ந்தெடுப்பு ஒரு வெளியரங்கமான

வகையில் சபையாருக்கு முன்பாக சுவிசேஷகர் அல்லது வேறு யாரோ சொற்பொழிவு செய்கிறவராய் அறியப்படும்படி செய்ய வேண்டியதாய் இருக்கிறது. இதுவே அலுவலர்களை நியமித்தல் அல்லது ஏற்படுத்துதல் என்பதாக அறியப்படுகிறது.

**5. சபையினாலே அங்கீகாரம்:**

மூப்பர்கள் குறித்து சிந்தனை செய்தபின்பு, அங்கீகரிக்கப்பட்டு, சபையாரால் நியமிக்கப்பட்ட பின்பு அங்கே சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய அலுவலர்கள் அப்போஸ்தலர்களுக்கு முன்பாக உதவிக்காரர்கள் ஜெபித்து கைகளை அவர்கள் மேல் வைத்து முதலாவது உதவிக்காரர்கள் தீர்மானிக்கப்பட்டனர் அற்புதங்கள் நடைபெற்ற நாட்களிலே அப்போஸ்தலர்கள் ஆவியினாலே அற்புத வல்லமை அவர்கள் மேல் கைகளை வைத்ததினாலே அருளப்பட்டன (அப்.8:18). ஆனால் அக்காலத்திற்கு பின்பு இன்று அப்போஸ்தலர்களும், அற்புதங்களும் இல்லாததினால் கைகளை வைக்குதல் என்பது இந்த நோக்கத்தை நிறைவேற்றுகிறதில்லை. ஆனால் அந்தியோகியாவில் இருந்த சபையார் சவுல் மற்றும் பர்னபாவின் மேல் வைகளை வைத்து தங்களுடைய ஒத்துழைப்பை வாக்குப்பண்ணும்படியாக தங்களுடைய அங்கீகாரத்தை வெளிப்படுத்தும்படியாக அப்படி செய்தார்கள் (அப்.13:1-3). மூப்பர்கள் கைகளை வைப்பதன் மூலம் இந்த நோக்கத்தை இன்றைக்கு நிறைவேற்ற முடியும். இது புதிய அலுவர்களை அங்கீகாரம் செய்வதையும் சபையானது அவர்களுக்கு அடங்கியிருக்க வேண்டியதையும் வெளிப்படுத்த கைளை வைப்பது என்பது ஒழுங்கு முறையாக இருக்கிறது. சில வெளியரங்கமான வகையிலே சபையானது அதன் புதிய மூப்பர்களை அங்கீகரித்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்களிடத்தில் உறுதியான நம்பிக்கையுடையவர்களாக இருந்து அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருப்பதில் உடன்பாடு உடையவர்களாயிருக்க வேண்டும். இந்த வேலையானது ஒளிவு மறைவு இல்லாததாகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் இருக்கவேண்டும். இது ஒரு கொண்டாட்டமாகவோ, மதச்சடங்காகவோ இருந்து பாழடிக்கப்பட வேண்டாம். அங்கே நான்கொடைகளுக்கோ அல்லது விருந்துகளுக்கோ எந்த ஒரு காரணமும் இருக்க வேண்டாம். சபையானது வெளியரங்கமாக தன் அலுவலர்களை அங்கீகரிக்கின்ற வேளையில் அது எளிமையானதாக இருக்கக்கடவது.

கேள்விகள்

1. பரிசுத்த ஆவியானவர் சபைக்கு --------- ------------ மூலமாக போதிக்கிறார்.

2. வாஞ்சையை அளிக்கிற 2 நபர்களின் பெயர்களை கூறுங்கள் -------- -------

3. சபையானது ஒரு மனுஷனுடைய முதர்ச்சியை உற்று நோக்குகிறபடியால் அவன் ------------------.

4. நான்காவது படிக்கட்டு தகுதி வாய்ந்த மனுஷருக்கு ------------------------

5. இந்த மனுஷரை குறித்து எச்சரிக்கையாயிருக்கிறவர்கள் யார்? -------------

6. "நியமித்தல்" (Ordain) என்பதற்கான 3 வார்த்தைகளை கொடுக்கவும் ----- --- ----------- -----------------------.

7. பிரசங்கியார் மூலமாக உண்மையிலேயே மூப்பர்களை நியமிக்கிறவர்கள் யார்? ----------

8. நியமனத்திற்கு முன்பு சபையானது அதற்கான நபர்களை ------------- அல்லது -------------.

9. அற்புதங்களை அளிக்கும்படி இன்றைக்கு கைகளை வைக்க வேண்டியதாய் இருக்கிறதா? ------------------

10. ஏதோ ஒரு வகையில் சபையின் ---------------- மற்றும் ------------- வெளியரங்கமாக காட்டப்பட வேண்டியதாயிருக்கிறது.



பெண்கள் பகுதி

## நோவா – Noah

*-Glory Arjunan*

**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

அடுத்ததாக, நோவாவின் விசுவாசக் கூருகள் The Components of Noah`s faith: குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என தியானிப்போம். நோவாவின் விசுவாசம் எப்படிப்பட்டதாயிருந்தது? அவன் காணாதவைகளை விசுவாசித்தான். எபிரெயர் ஆசிரியர் கூறுகையில், "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைவகளைக்குறித்து தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான் (எபி.11:7) என்கிறார். இவ்வசனத்தை வாசிக்கும்போது, நோவா தற்காலத்திலே (அவன் வாழ்ந்த காலத்திலே) காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பைப் பெற்றான் எனக் காண்கிறோம். இது தேவன் நோவாவின் மேல் கொண்ட இரக்கத்தினாலே அக்கிரமக்காரர்கள் மத்தியில் அவனைக் காக்கும்படியான ஓர் அழைப்பு என்று தான் கூறவேண்டும் நீங்கள் எப்போதாவது தேவ எச்சரிப்பைப் பெற்றுள்ளீர்களா?

"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்த படியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்க ளெல்லாரிடத்திலும ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2தெச.1:7,8) என்று எழுதப்பட்டுள்ளது. தேவஎச்சரிப்பு இது! ஆம்! தேவன், தம்மை விசுவாசித்து, கிறிஸ்துவின் இரத்தத்தால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிற நம்மனைவரின் மேலும் இரக்கம் கொண்டவராக நம்மை நித்திய அழிவுக்குத் தப்புவிக்கும்படிக்குக் கொடுத்துள்ள தேவ எச்சரிப்பு தான் இது. எனவே மனந்திரும்பி புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று விசுவாசித்து காத்திருப்போம்.

மேலும் எபிரெயர் 11:7ல் "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்திள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்" என வாசிக்கிறோம். நோவா, அதுவரை ஜலப் பிரளயத்தைக் காணாதவனாகவும், அதைக் குறித்து

அறியாதவனாகவுமிருந்தான். இருந்தபோதிலும் அவன் தேவனை விசுவாசித்து, நீதிமானாயிருந்தபடியினால் தேவனுடைய கட்டளைக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்து, அவர் சொன்னபடியெல்லாம் செய்து ஆயத்தமானான். ஆனால் நோவாவின் நாட்களில் வாழ்ந்தவர்களோ ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாறிக்குகொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்.

அன்பு சகோதரிகளே, மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் வரப்போகிறார் என்பதை அறிந்து அவரை சந்திக்கவும், அவரோடுகூட மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்கவும் ஆயத்தமாயிருக்கிறீர்களா அல்லது அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே என்று கேள்வி எழுப்பிக்கொண்டு அவிசுவாசமாக இருக்கின்றீர்களா? சிந்தியுங்கள். இயேசு "வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை, அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளையத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகும்மட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" (மத்.24:35-39) என்றார்.

"ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபி.12:28,29) என வாசிக்கிறோம். எனவே நோவாவைப்போல பயபக்தியுள்ளவர்களாக, நம்மோடுகூட நம் குடும்பத்தாரை காப்பாற்ற முயலுவோம். "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9) என்பதை அசட்டை செய்ய வேண்டாம். அக்கிரமக்காரர்கள் மத்தியில் வாழ்கின்ற நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படியே இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் நம்முடைய பாவங்களுக்காக மீறுதலுக்காக ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டார். ஆனாலும் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டவராக இன்றும் உயிரோடிருக்கிறார் (1பேது.3:18). மீண்டும் சீக்கிரமாய் வரப்போகிறார் "இதோ, சீக்கிரமாய் வருகிறேன் இந்தப்புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" (வெளி.22:7) என்கிறார்.

அன்பான சகோதரிகளே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்து ஆழமாக நிதானித்துப் பார்ப்போம். நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா நீதிமானாக, உத்தமனாக,

தேவனுடைய கட்டளையை மாற்றாமல் அப்படியே செய்து முடித்தவனாக, பயபக்தியுடன் தேவஎச்சரிப்பை ஏற்றுக் கொண்டவனாக, காணாதவைகளை விசுவாசித்து தன்னையும், தன்குடும்பத்தையும், சகலவித மாம்சமான ஜீவன்களையும் தப்புவிக்கும்படி தேவனுடைய திட்டத்தின்படி பேழையை ஆயத்தப்படுத்தி காக்கப்பட்ட நோவாவை நமக்குத் திருஷ்டாந்தமாகக் கொள்வோம். நோவாவின் நாட்களில் நடந்ததுபோல வருகிறவராகிய மனுஷகுமாரன் இயேசுவின் நாட்களிலும் நடக்கும் என்பதை விசுவாசிப்போம்! தேவபக்தியுள்ளவர்களாயிருப்போம்! கர்த்தராகிய இயேசுவே, வாரும் என்று சொல்லி அவரை சந்திக்க ஆயத்தமாயிருப்போம். தேவன் தாமே நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவாராக! ஆமென்.

**தெரிந்து கொள்ளுவோம்**

- தேம்ஸ் நதி லண்டன் நகரில் ஓடுகிறது
- துருக்கி 'ஐரோப்பாவின் நோயாளி' என அழைக்கப்படுகிறது
- ஒட்டகம், பன்றி – இந்த விலங்குகளுக்கு நீந்தத் தெரியாது
- மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10 அன்று கடைபிடிக்கப்படுகிறது
- ஆண் குதிரைக்கு 38 பற்களும், பெண் குதிரைக்கு 40 பற்களும் உள்ளன
- நீளமான எல்லைக் கோடு கொண்ட நாடு சீனா
- இரும்பை உருக்கும் முறையை கண்டு பிடித்தவர் ஹென்றி பெசிமல்



**JOIN OUR**
**WORLD EVANGELISM**
**BIBLE SCHOOL**
**RIGHT NOW**

Contact Us: 94435 58041

**ஜெபியுங்கள்**



- இம்மாதம் வத்தலக்குண்டில் நடைபெறும் கூட்டத்திற்காக...
- சென்னையில் நடைபெறும் கூட்டத்திற்காக...
- செய்தி கொடுக்கும் தேவனுடைய ஜனங்களுக்கா...
- கலந்துகொள்ளும் சகோதர, சகோதரிகளுக்காக...
- புதிய சபைகள் எழும்ப...
- நமது வேதாகம பள்ளி மாணவர்கள் ஊழியங்களுக்காக...
- மொபைல் மூலமாக நடைபெறும் அனைத்து ஊழிங்களுக்காக...



**மாத இதழுக்கான சந்தா செலுத்த இரு வழிகள்**

**The Word of Christ**
**Canara Bank A/c No.094620100552**
**IFSC:CNRB0000946**

**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**

சிறுவர் பகுதி

## கானா ஊரில் கல்யாணம் - The Wedding at Cana

ஹாய் குட்டீஸ்! எல்லாரும் நல்ல சுகமாயிருக்கிறீர்களா? OK. இம்மாதம் நம் இயேசு ஆண்டவர் மக்கள் மத்தியில் செய்த முதல் அற்புதம் என்ன என்பதைப் பார்ப்போமா?

கலிலேயா நாட்டில் கானா என்ற ஒரு ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒரு கல்யாணம் நடந்தது. இந்த கலியாணத்துக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் அழைக்கப்பட்டிருந்தாங்க, அந்த கல்யாணத்துக்கு இயேசுவின் தாய் மரியாளும் கூட போனாங்க. அந்தப் பகுதியிலே அதிகமான திராட்சப் பழங்கள் விளையுமாம் அதனால, கல்யாண வீடுகளில் திராட்சப் பழ ஜூஸ் பரிமாறுவாங்க. நம்ம ஊர் கலியாணத்திலே பாயாசம், கேசரி, அல்வா இன்னும் அநேக ஸ்வீட்ஸ் எல்லாம் பரிமாறுகிறார்கள் அல்லவா?

இதே மாதிரிதான் அங்கேயும் Grape Juice கொடுத்தாங்க. தீடீரென்று ஜூஸ் தீர்ந்துவிட்டது. பந்தியில் உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாருக்கும் திராட்ச பழ ஜூஸ் கொடுக்கணும்தானே? எப்படி கொடுப்பாங்க, இங்கே தான் ஜூஸ் தீர்ந்துவிட்டதே என்று தானே நினைக்கிறீங்க. ஆமாம். திராட்ச பழ ஜூஸ் தீர்ந்து விட்டது என்று மரியாளுக்குத் தெரிந்தவுடன் அவள் இயேசு ஆண்டவரிடம் வந்து அதைத் தெரியப்படுத்தினாங்க. "இயேசு ஆண்டவரோ, மரியாளைப் பார்த்து ஸ்திரீ எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்". உடனே இயேசுவின் தாய், வேலைக்காரர்களைப் பார்த்து இயேசு உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்க என்றாள். அப்புறம் பார்த்தீங்களா, இயேசு ஆண்டவர் அங்கிருந்த ஆறு கல் ஜாடிகளில் தண்ணீரை நிரப்புங்க என்று வேலைக்காரரை நோக்கி சொல்ல, உடனே வேலைக்காரர்களும் அப்படியே தண்ணீரை ஊற்றி ஜாடிகளை நிரப்பினார்கள். அதை மொண்டு கொடுக்கும்போது பந்தியில் உட்கார்ந்திருந்தவங்க எல்லாம் ஆ! ஆ! இந்த ஜூஸ் மிகவும் ருசியாக இருக்கிறதே, முதலில் ருசியுள்ள இந்த ஜூஸை ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள்.

பார்த்தீர்களா? கர்த்தர் எவ்வளவு வல்லவர்! தண்ணீரைக்கூட ருசியான திராட்ச ரசமாக மாற்றிவிட்டாரே! ஆமாம், அதற்கப்புறம் நிறைய அற்புதங்களையும் செய்தார். இனிமேலும் அவர் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து ஆசீர்வதிப்பார். இது தான் இயசே செய்த முதல் அற்புதம்! குட்டீஸ். நீங்களும் தேவனிடத்தில் வேண்டி கேட்டுக்கொண்டு கர்த்தர் சொல்லுகிறபடியெல்லாம் செய்தால் தேவன் எல்லாவற்றையும் உங்களுக்கும் செய்வார். OK. வா?



மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

**மனப்பாடவசனம்**

**"...அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்..." யோவான் 2:5**

## வேத அறிவுப் போட்டி எண்: 266

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, மலையின்மேல் ஏறி இரவும் பகலும் எத்தனை நாள் மலையில் இருந்தான்?
2. சீலோவாமிலே கோபுரம் விழுந்து எத்தனைபேரைக் கொன்றது என இயேசு சொன்னார்?
3. தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற எவைகளுக்குத் தங்கள் பலிகளை இனிச் செலுத்தாதிருங்கள் என்று இஸ்ரவேலருக்கு சொல்லப்பட்டது?
4. நான் எழுதினது எழுதினதே என்ற தேசாதிபதி யார்?
5. ஒரே சாட்சியைக் கொண்டு மாத்திரம் ஒரு மனிதன் சாகும்படி தீர்ப்புச் செய்யலாமா?
6. தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான் ஏறக்குறைய எத்தனைபேர் அவனைச் சேர்ந்தார்கள்?
7. மறைவானவைகள் எவருக்கே உரியவைகள்?
8. இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு எவைகளைத் தரித்துக்கொள்ளக் கடவோம்?
9. இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக மோசே எழுதியிருந்த நியாயப்பிரமாணத்தை எவன் அங்கே கற்களில் பேர்த்தெழுதினான்?
10. எவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்?

## வேதாகம ஆய்வு... 50

## ஒபதியா

## Obadiah



1. இவன் ஆகாபின் அரண்மனை விசாரிப்புக்காரன்
2. இவன் கர்த்தருக்குப் பயந்து நடந்தவன்
3. ஒபதியா எலியாவை நோக்கி: நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா என்று கேட்டான் – 1இரா.18:7
4. யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை கொன்று போடுகிறபோது கெபிக்கு 100 மற்றும் 50 கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை ஒளித்து வைத்து அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து பராமரித்தான் – 1இரா.18:13
5. எலியா சொன்னபடி ஆகாப்ராஜாவுக்கு அதை அறிவித்தான் – 1இரா.18:14–16

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

October 2022



சுவிசேஷ கூட்டம்

சகோதரிகள் வேதபாட வகுப்பு
இடம்:
வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை வளாகம்



Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan